செ.வெ.எண் -02 நாள்:02.02.2018

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு பிரத்தியேக சிறப்பு குறைதீர்வுக் கூட்டம் 08.02.2018 அன்று காலை 10.00 மணிக்கு மாற்றுத்திறனாளிகளின் குறைகள் மற்றும் இன்னல்களை கேட்டறிந்து களைந்திடும் விதமாக மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பிரதானக் கூட்டரங்கில் பிரத்தியேக சிறப்பு குறைதீர்வுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

அரியலூர் மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகள் அனைவரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களது கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் நேரடியாக அளித்து உரிய உதவிகளை பெற்று பயன்பெறுமாறும், இச்சிறப்பு முகாமிற்கு வரும் மாற்றுத்திறனாளிகள் தங்கள் கோரிக்கை மனுவுடன் மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை நகல், குடும்ப அட்டை நகல், ஆதார் அட்டை நகல் மற்றும் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் 4 ஆகியவற்றை இணைத்து கொடுக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.